IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 63 /2010

Deposition of witness for PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : புனிதா | Caste | : - |
| Husband's Name | : முத்தப்பன் | Calling | : - |
| Village | : பெங்களூர் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 day of July, 2019.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் அழைப்பின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு சம்மந்தமாக நேரிடையாக எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு பற்றிய சங்கதிகள் அனைத்தும் எனது மாமனார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சாட்சி சொல்வதற்கு எனக்கு அந்த வருடம் தான் சங்கதிகள் தெரியும். பிரதிவாதி தேவராஜ்-ஐ எனது திருமணத்திற்கு முன்பே என் கணவருக்கு தெரியும் என்ற விவரத்தை எனது கணவர் என்னிடம் சொல்லியிருக்கிறாரா என்றால் தூரத்து சொந்தம் என்று சொல்லியுள்ளார். எனக்கும், எனது கணவருக்கும் பெரியவர்களாக பார்த்து நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். திருமணம் ஆனதிலிருந்து பாளையம் குப்பத்தில் நான் இல்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும், எனது கணவரும் பாளையம் குப்பத்தில் உள்ள தாவா சொத்திற்கு சேர்ந்து சென்று பார்த்ததில்லை என்றால் நான் போய் பார்த்ததில்லை என் கணவர் சென்று பார்த்தார். எனக்கு திருமணம் ஆனது முதல் இன்றைய தேதி வரை தாவா சொத்து யார், யார் பெயரில் இருக்கிறது என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல எனது மாமனார் பெயரில் உள்ளது. இந்த விவரம் எனது மாமனார் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் வாதியின் மகன், பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்ற விவரம் எனது

மாமனார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த தாவா சொத்தில் எனக்கு பங்கு இருக்கிறதா என்று எனது மாமனார் என்னிடம் சொன்னாரா என்றால் நான் கேட்கவில்லை அவரும் சொல்லவும் இல்லை. எனது கணவர் இறந்து 4,5 ஆண்டுகளுக்கு பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1995-ல் தாவா சொத்தை வாதியின் மகன் கிரையம் செய்து கொடுத்த விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது. கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் ஆனால் என்ன விவரம் என்று எனக்கு தெரியாது. எழுதிய தாளில் தான் நான் கையொப்பம் செய்தேன். ஆனால் அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என்னுடன் சேர்ந்து வேறு யாரும் சாட்சி கையொப்பம் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. பத்திரப்பதிவு செய்யும் போது என் கணவர் தேவராஜ் உடன் ஊருக்கு செல்கிறேன் என்று சொன்னார் நான் மறுநாள் வந்தேன். 1993-ம் ஆண்டு எனக்கு திருமணம் நடந்தது. பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு நேரிடையாக வரச்சொன்னார் என்றால் சரியல்ல அவரது அக்கா வீட்டிற்கு என்னை வரச்சொன்னார். எனது கணவரும் எனது சொந்த ஊரான பாளையம் குப்பம் கிராமம் செல்வதாக இருவரும் கிளம்பினார்கள் அதனால் என் கணவரின் பெற்றோருடன் பேச்சுவார்த்தை இல்லாமல் இருக்கும்போது செல்வதால் ஏதாவது அசம்பாவிதம் நடக்குமோ என்று நானும் அவர்களுடன் வந்தேன் என்று நிரூபணவாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனக்கு தாவா சொத்தை எனது கணவர் தேவராஜ்க்கு கிரையம் முடித்து கொடுக்கப்போகும் விஷயம் தெரிந்து தான் நான் எனது கணவருடன் சேர்ந்து வந்தேன் என்றால் சரியல்ல. எனது கணவர் கொடுத்த கிரையம் எனக்கு நன்றாகவே தெரியும் என்றால் சரியல்ல. 2006-ம் ஆண்டு எனது கணவர் இறந்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றும், தேதி, மாதம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல 3-ந்தேதி 6-வது மாதம் 2006-ம் ஆண்டு விபத்தில் இறந்துபோனார். ஆனால் எவ்வாறு இறந்தார் என்ற விவரத்தை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை. எனது கணவருக்கு திருமணத்திற்கு முன்பாகவும், அதற்கு பின்பாகவும் குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. பிரதிவாதி தேவராஜ் தான் என்னுடைய கணவருக்கு குடிப்பழக்கத்தை ஏற்படுத்தி என் முன்னிலையில் கையெழுத்து வாங்கினார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என் கணவருக்கு எந்தவித பணமும் கொடுக்காமல் மதுவுக்கு அடிமையாக்கி மோசடியான பத்திரத்தை தயார் செய்து அதில் போதையில் இருந்த எனது கணவரிடம் கையெழுத்து வாங்கிவிட்டார் என்று நான் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல நான் அவ்வாறு குறிப்பிடவில்லை. எனது மாமனார் கூட்டுபட்டாவில் உள்ள விவரத்தை இதுவரை என்னிடம் காட்டவில்லை என்றால் நானும் கேட்கவில்லை அவரும் காட்டவில்லை. வழக்கு சொத்தின் எல்லைகள் பரப்பளவு, சர்வே எண் இவை குறித்து எந்த விவரமும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். 1995-ல் கிரையம் கொடுத்தது முதல் இன்றுவரை பிரதிவாதி தேவராஜ் பெயரில் தான் வரிரசீதுகள், பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் ஆகியன ஏற்பட்டுள்ளன என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனக்கும், எனது மாமனாருக்கும் எல்லா விவரமும் தெரியும் என்றும் அதனால் தான் எனது கணவர் இறந்த பிறகு இந்த வழக்கை எனது மாமனார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. உண்மையிலேயே என்னையும், எனது மாமனாரையும் பிரதிவாதி ஏமாற்றி சொத்தை வாங்கியிருந்தால் 3 ஆண்டு கால அவகாசத்திற்குள் நான் வழக்கு தொடர்ந்திருப்பேன் என்றால் சரியல்ல எனக்கு தெரியாது. அவர் விற்றபிறகு தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் பட்டா பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் நிரந்தரமாக வசித்து வரும் விவரத்தை காட்டும் ஆவணம் எதுவும் எனது மாமனார் தாக்கல் செய்திருப்பாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் வங்கியில் கடன்வாங்கி தாவா சொத்து சம்மந்தமாக பயிர்கடன் வாங்கி பணம் செலுத்தியதற்கான ரசீது வைத்திருக்கிறாரா என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாகத்தான் இந்த ஊருக்கு நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கும் திருமணம் ஆகி பிள்ளைகள் உண்டா என்றால் உள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது எனது மாமனார் சொல்லி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கும் கிடைக்கவேண்டிய

பாகச்சொத்தை தான் எனது கணவர் கிரையம் செய்து கொடுத்தார் என்றும், அதை நான் மூடி மறைக்கிறேன் என்றால் சரியல்ல. தற்காலத்தில் தாவா சொத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டது என்றும், அதனடிப்படையில் தாவா சொத்தை அபகரிக்கும் வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த எனது மாமனாரின் வழக்கிற்கு அதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட முழுவிவரமும் என்கு தெரியாது என்றும், எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPAD I.